I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.145/2022 நாள் : 01.09.2025 வா.சா.1– திரு.அய்யரப்பன்.</u>

**முதல் விசாரணை :–**

நான் வாதி. 21.05.2022 அன்று தாவா சொத்து குறித்து பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ 1**. பிரதிவாதிக்கு நான் கொடுத்த சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் **வா.சா.ஆ 2**. பிரதிவாதி அதைப் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ 3**. 1ம் இலக்க சொத்திற்கு பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் **வா.சா.ஆ 4**. 2, 3 இலக்க சொத்துக்களுக்கு பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ 5.** 4ம் இலக்க சொத்திற்கு பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் **வா.சா.ஆ 6.** ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

நான் கத்தாளம்பட்டியில் குடியிருக்கிறேன். பிரதிவாதி கம்பத்துப்பட்டியில் குடியிருக்கிறார். பிரதிவாதி என் மூத்த மனைவியின் மகனின் நண்பர். பிரதிவாதி என் உறவினர்தான். என் மகன் கல்குவாரி தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். என் மருமகன்கள் சந்திரமோகன் மற்றும் ஆறுமுகம் கல்குவாரியை என் மகன் நடத்தி வந்தார். அவருடன் சேர்ந்து இந்த பிரதிவாதியும் கல்குவாரி நடத்தி வந்தார். தொழில் அபிவிருத்திக்காக என் மகன் பணம் கேட்டு என் மனைவியின் நகைகளை என் மகனுக்கு நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கல்குவாரி அலுவலகத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட

ஆவணங்கள் மற்றும் தொழில் ஆவணங்களும், சொத்து ஆவணங்கள் சிலவற்றையும் வைத்திருந்தார் என்றால் சரிதான்.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.01 18:29:41 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.